## சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை - 2023-2024 - அறிவிப்புகள் - அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 326 சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறன் குழந்தைகளை பராமரித்தல் - தன்னார்வ தொண்டு நிறுவனங்களை சேர்ந்த பராமரிப்பு உதவியாளர்களுக்கு ரூ.4,500/- தொகுப்பூதியம் வழங்குதல் - ரூ.1.76 கோடி நிதி ஒப்பளிப்பு - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

## மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-1.1)த் துறை

அரசாணை (நிலை) எண். 14

நாள்: 21.06.2023,
சோபகிருது, ஆனி – 6,
திருவள்ளுவர் ஆண்டு, 2054.

படிக்கப்பட்டது :

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 17.04.2023.
2. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரக ந.க. எண்.3018/சிப.2/2023, நாள் 20.04.2023.

******

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2023-2024-ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் போது, 17.04.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னபிறவற்றுடன் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

> **"அரசு நிதியுதவியுடன் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 326 சிறப்புப்பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறன் குழந்தைகளைப் பராமரிக்க ஏதுவாக மாதந்தோறும் ரூ.4,500/- மதிப்பூதியத்தில் பராமரிப்பு உதவியாளர்களை நியமனம் செய்ய ரூ.176.04 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்".**

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, அரசின் நிதியுதவி பெற்று செயல்பட்டு வரும் 326 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு (283 அறிவுசார் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான நிறுவனம், 36 செவி மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான நிறுவனம், 7 பார்வை மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான நிறுவனம்) தலா ஒரு பராமரிப்பு உதவியாளர் மாதம் ரூ.4,500/- தொகுப்பூதியத்தில் நியமனம் செய்து கொள்ள 326 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ரூ.1,76,04,000/- கூடுதல் செலவினம் ஏற்படும் எனவும், இத்திட்டத்திற்கென தேவைப்படும் கூடுதல் செலவினத் தொகையினை 2023-2024-ஆம் நிதியாண்டிற்கான வரவுசெலவு திட்ட நிதி ஒதுக்கீட்டிற்குள் செலவினம் மேற்கொள்ள இயலும் எனத் தெரிவித்துள்ளார். இந்நிலையில் 326 சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறன் குழந்தைகளை பராமரிக்க ஏதுவாக தன்னார்வ தொண்டு நிறுவனங்களை சேர்ந்த பராமரிப்பு உதவியாளர்களுக்கு ரூ.4,500/- தொகுப்பூதியத்தில் நிதியுதவி அளிப்பதற்கு அனுமதி ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, அரசு நிதியுதவியுடன் தன்னார்வ

தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 326 சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறன் குழந்தைகளை பராமரிக்க ஏதுவாக தன்னார்வ தொண்டு நிறுவனங்களை சேர்ந்த பராமரிப்பு உதவியாளர்களுக்கு ரூ.4,500/- தொகுப்பூதியத்தில் வழங்க ஆண்டுக்கு ரூ.1,76,04,000/- (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தாறு இலட்சத்து நான்காயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் இச்செலவினத்தை நடப்பாண்டுக்கு ஆணை வெளியிடும் நாள்முதல் கணக்கிட்டு வழங்க மாற்றுத்திறனாளிகள் நல ஆணையருக்கு அனுமதியளித்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி-3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்க்காணும் கணக்குகளின் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 – சமூக நலன் - 101 – மாற்றுத்திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் - MG மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு நிலையங்களுக்கான புகழ்வாய்ந்த அரசு சாரா அமைப்புகளுக்கு நிதியுதவி -309- உதவித்தொகை – 01- நடப்புச் செலவுக்கான உதவித்தொகை"
**(IFHRMS த.தொ.கு.2235-02-101-MG-30901)**

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 – சமூக நலன் - 101 – மாற்றுத்திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – AR- காது கேளாதோர் பள்ளிகள் -309- உதவித் தொகை – 03- குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"
**(IFHRMS த.தொ.கு.2235-02-101- AR -30903)**

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் - 02 – சமூக நலன் - 101 – மாற்றுத்திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – AA- பார்வையற்றோர் பள்ளி -309- உதவித் தொகை – 03- குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
**(IFHRMS த.தொ.கு.2235-02-101- AA -30903)**

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.23242/ நிதி(ச.ந)/2023, நாள் 20.06.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**இரா. ஆனந்தகுமார்,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
**நகல்**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
செயலரின் தனிச் செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சென்னை-9.
நிதி (ச.ந) த் துறை, சென்னை-9.
திட்டம் வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

பிரிவு அலுவலர் 22/6/23
22/6/23